
# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் ● திருவள்ளுவர் ஆண்டு 2056, - செப்டம்பர் 13, 2025 Weekly E-paper ● September 13, 2025



# எரிச்சல்படும் குருமூர்த்தியும் எழுந்து நிற்கும் திராவிடமும் !

சுப.வீரபாண்டியன்

## அ.தி.மு.க. கைப்பற்றப்படுமா? காப்பாற்றப்படுமா?

சாரதாதேவி

## அதிமுக-பாஜக ஆட்டம்!

தலையங்கம்

## இயக்கச் செய்திகள்


# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் ● திருவள்ளுவர் ஆண்டு 2056, - செப்டம்பர் 13, 2025 Weekly E-paper ● September 13, 2025


# எரிச்சல்படும் குருமூர்த்தியும் எழுந்து நிற்கும் திராவிடமும் !

**சுப.வீரபாண்டியன்**



அண்மையில், இந்தியா டுடே சார்பில் நடைபெற்ற ஒரு நிகழ்வில், துக்ளக் ஆசிரியர் குருமூர்த்தி அளித்த நேர்காணல், பாதி எரிந்த நிலையில் பேசும் பார்ப்பனியத்தின் குரலாக இருந்தது !

ஒரு நூற்றாண்டுக்கு முன்பு காங்கிரஸ் கட்சியில் இருந்த பெரியார் (அவர்கள் மொழியில் ஈ.வே. ராமசாமி நாயக்கர்), அதிலிருந்து வெளியே வந்த பிறகு, முழுக்க முழுக்கப் பார்ப்பனிய எதிர்ப்பாளராக மாறினார். அதன் விளைவாக, தமிழ்நாட்டின் கலாச்சாரமே சீரழிந்து விட்டது. அப்போதெல்லாம் பிராமணாளைக் கண்டால் காலைத் தொட்டுக் கும்பிடுவார்கள். இப்போது அதுவெல்லாம் போய்விட்டது. தமிழ்நாட்டின் கலாச்சாரத்தில் ஒரு சீர்கேட்டை அவர் கொண்டு வந்து விட்டார் என்ற புலம்பலோடு அந்த நேர்காணல் தொடங்கிற்று!

நேர்காணல் முழுவதும் திராவிட இயக்க எதிர்ப்பு என்பதே மேலோங்கி நிற்கிறது. திராவிடம் தமிழுக்கு, தமிழ் அடையாளத்துக்கு எதிரானது என்பது போன்ற பொய்யான செய்திகள் மீண்டும் மீண்டும் பேசப்பட்டுள்ளன!

பெரியார் தமிழைக் காட்டுமிராண்டி மொழி என்று சொன்னார் என்றும், திருக்குறளைத் தங்கத்தட்டில் வைத்த மலம் என்று சொன்னார் என்றும், உண்மையும் பொய்யும் கலந்து அந்த மேடையில் குருமூர்த்தி பேசினார்! தமிழை நீச பாஷை என்று சொன்னவர்கள் பற்றி ஒரு குறிப்பும் இல்லை! திருக்குறள் குறித்துப் பெரியார் எங்கே அப்படி எழுதியோ, பேசியோ இருக்கிறார் என்ற வினாவிற்கு இன்று வரையில் யாரும் ஆதாரத்தைக் காட்டவில்லை!

ஆனால் திரும்பத் திரும்ப அதையே சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்!

இன்னொன்றையும் அந்த நேர்காணலில் குருமூர்த்தி சொல்கிறார்....தமிழ்நாட்டின் அரசியலில் மாற்றம் வரவில்லை என்றாலும், கோயில்களில் கூடும் கூட்டம் கூடி இருக்கிறது என்கிறார்! என்ன பொருள்? கோயில்களில் வருகிற கூட்டம், அந்த அடிப்படையில் தமிழ்நாட்டின் அரசியலை முடிவு செய்வதில்லை என்பதுதான்! ஆனால் அந்த உண்மை ஏனோ குருமூர்த்திகளுக்குப் புரியவில்லை

இது போன்ற நேர்காணல்களால் எல்லாம் பெரியாரின் புகழையோ, திராவிடத்தின் வலிமையையோ இவர்களால் குறைத்து விட முடியாது! இருப்பினும் இங்கே இரண்டு செய்திகளை நாம் எண்ணிப் பார்க்க வேண்டியிருக்கிறது!

திமுகவின் மீதும், திராவிட இயக்கத்தின் மீதும் குருமூர்த்திகளின் எரிச்சல் கூடிக் கொண்டே போவதைப் பார்க்கும் போது, திமுக தமிழ்நாட்டில் இப்போதும் வலிமையாக இருப்பதை நம்மால் உணர முடிகிறது!

இரண்டாவது, போலித் தமிழ்த் தேசியர்கள் வெறுமனே வாயசைப்புதான் செய்கிறார்கள். உண்மையாய்ப் பின்னால் இருந்து குரல் கொடுப்பவர் குருமூர்த்திதான் என்பதும் புரிகிறது! •

# அ.தி.மு.க. கைப்பற்றப்படுமா? காப்பாற்றப்படுமா?

**சாரதாதேவி**

அ.தி.மு.க புள்ளிகள் நடத்தும் நாடகம் அனைத்தும், பா.ஜ.கவிடம் சரணடைய அமித்ஷா எழுதிக் கொடுப்பதுதான் என்பது மீண்டும் ஒரு முறை செங்கோட்டையனால் நிரூபிக்கப்பட்டுள்ளது. மன நிம்மதி வேண்டி அவர் 'ஹரித்வார்' போகிறேன் எனப் புறப்பட்டாலும், நிறைய நடிக்காமல், கார்கள் மாறாமல், முழுதும் நனைந்த பின்னர் முக்காடு எதற்கு என நேரடியாக அமித்ஷாவை சந்தித்துவிட்டு வந்துவிட்டார்.

செங்கோட்டையனைத் தொடர்ந்து அமித்ஷாவைச் சந்தித்து வந்திருக்கிறார் டி.டி.வி.தினகரன்.

எடப்பாடி முதலமைச்சர் ஆகக்கூடாது என்பதை இவ்விருவர் மூலமாக, அ.தி.மு.க எனும் ஆடுகடித்த இலைக் கட்சிக்கு அமித்ஷாவால் விதிக்கப்படும் நிபந்தனை என்று புரிந்துகொள்ள முடிகிறது. கூட்டு அமைச்சரவை என்ற அமித்ஷாவின் முழக்கத்தை ஏற்காத எடப்பாடியார் அல்லது ஏற்கவைக்கப்படாத எடப்பாடியார் தான் இப்போது அமித்ஷாவின் சிக்கல்! அவரை அடிபணிய வைக்கப் பணப்பெட்டிகளும் ஆசைப் பெட்டிகளும் திறந்துவைக்கப் பட்டிருக்கின்றன.

ஆனாலும் இலையை மீட்டெடுப்பதற்குப் பதிலாக அந்தக் கட்சியின் மூத்தவர்கள், எடப்பாடியின் அசைவுகளைக் கட்டுப் படுத்துவதாகத் தெரிகிறது. இல்லை என்றால் அவராவது இவ்வளவு கெடுபிடி காட்டுவதாவது!

ஜெயலலிதாவின் மறைவை முன் கூட்டியே கணித்து, சசிகலாவின் தலையில் கை வைத்துச் சென்றார் மோடி! அன்றே தொடங்கிவிட்டது அ.தி.மு.க வின் அழிவு. இவர்கள் ஊழல் செய்து ஈட்டி வைத்திருந்த கொள்ளைப் பணத்தில்பாதியைரெய்டுமிரட்டலுக்குப்பயந்து,பகிர்ந்து, மிச்சத்தையாவது காப்பாற்றிக்கொள்ளலாம் என்றால் அதற்கும் வேட்டு வைத்து இரண்டாம் நிலை புள்ளிகளை எல்லாம்தூண்டிவிட்டுசரியானநாடகம்நடத்தியிருக்கிறது பா.ஜ.க. இலைக்கட்சியைச் சிதைத்து, ஆட்சியிலும் தோள் மீது உட்கார்ந்து தாங்கள் நினைத்தவை எல்லாம் சாதித்துக் கொள்ள முயல்கிறார்கள் பா.ஜ.கவினர், தமிழ்நாட்டில்.

தமிழ்நாட்டு மக்களிடம் கிராமம் கிராமமாக, திண்ணை தோறும் சென்று அமர்ந்து பரப்புரை செய்து, அ.தி.மு.க.









**“அண்ணாவின் பெயரைத் தாங்கிய அ.தி.மு.க. எனும்கட்சி காப்பாற்றப் பட வேண்டும். கட்சியில் சுயமரியாதையைத் தக்க வைத்துக்கொண்டு, அமைதியாக இன்னும் கட்சிக்கு உயிர்க்காற்று அளித்துவரும் மூத்தவர்கள் அதைச் செய்ய வேண்டும். அடுத்தத் தேர்தலில் ஒருவலுவான எதிர்க்கட்சியாக, ‘பா.ஜ.க. முகமூடி’ இல்லாத ஒரு திராவிடக் கட்சியாக வரவேண்டும் என்பதே தமிழ் நாட்டுத் திராவிட அரசியல் நோக்கர்களின் எண்ணம்!”**

ஆட்சியின் அவலங்களை எடுத்துச் சொல்லி, பா.ஜ.க.வின் துரோகங்களை எடுத்துச் சொன்னதால், தமிழ் நாட்டு மக்கள் தங்களைக் காக்கும் எஃகு கோட்டையென தி.மு.க வை ஆட்சியில் அமர்த்தினார்கள். எதிர்க்கட்சியானது அ.தி.மு.க. ஆனால் அவர்கள் எதிர்க்கட்சியாகக் கூடச் செயல்பட விடவில்லை.

எடப்பாடி கட்சியைக் காப்பாற்றவே பெரும்பாடு பட்டுக்கொண்டிருக்கிறார். சசிகலா அம்மையார் ஏற்கனவே சோரம் போனவர்களை நம்பி மிஞ்சியதை அவிழ்க்கவும் துணிவின்றி இருக்கிறார். அமித்ஷாவை

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி!

கருஞ்சட்டைத் தமிழர்

## அதிமுக-பாஜக ஆட்டம்!

"முதலமைச்சர் வேட்பாளரை (எடப்பாடியை) மாற்றினால் நாங்கள் ஆதரவளிப்போம்" என்கிறார் டி.டி.வி.தினகரன்.

"பழனிச்சாமி, கட்சிக்கு (அதிமுகவுக்கு) துரோகம் செய்துவிட்டார்" இப்படிக் குற்றம் சாட்டுகிறார் ஓ.பன்னீர்செல்வம்.

"நான்தான் அதிமுகவின் பொதுச் செயலாளர்" இது சசிகலா.

"அதிமுகவை 10 நாட்களில் ஒருங்கிணைக்க வேண்டும்... ஒருங்கிணைத்தால் கட்சிக்கு நல்லது" என்று ஹரித்துவார் பக்கத்தில் அமித்ஷாவிடம் போய் முறையிட்டு வந்திருக்கிறார் செங்கோட்டையன்.

"அதிமுக இரண்டாகவோ, மூன்றாகவோ உடையவில்லை. திமுக தான் சலசலத்துள்ளது" பரப்புரையின்போது எடப்பாடியின் குரல்வாக்குமூலம் இது.

கட்சியை ஒன்றுபடுத்தி பலமாக்க வேண்டும் என்றால் அந்தக் கட்சித் தலைவர்கள் கூடிப்பேசுவது மரபு. அதைவிட்டுவிட்டு, இரு ஆட்டுக் குட்டிகள் நரியிடம் நீதிகேட்டதுபோல, அதிமுக காரர்கள் பாஜகவிடம் கட்சியை ஒன்றுசேர்க்க முறையிட்டுக் கொண்டு இருக்கிறார்களாம்.

இதில் எடப்பாடியைத் தவிர ஏனைய நான்கு அதிமுகவும், நடிகர் விஜய் கட்சியுடன் கூட்டணி வைக்கப் போவதாக தகவல்கள் கசிகின்றன.

பனையூர் பண்ணையார் போல வாழும் நடிகர் விஜயின் கட்சி ஒரு சினிமா கம்பெனியைப் போலத்தான் இருக்கிறது. அவர் வார இறுதிநாள் 'சனிக்கிழமை அரசியல்வாதி' போலக் காட்சி தருகிறார்.

இதற்கிடையில், தொடர்ந்து திமுகவை விமர்சித்து வந்த அண்ணாமலை, திமுக கட்டுக்கோப்பாக பலமாக இருக்கிறது என்று திடீரெனப் பேசியிருக்கிறார்.

இங்கேதான் அதிமுக குறித்து திருமூலரின் பாடலொன்று நினைவுக்கு வருகிறது:

"குருட்டினை நீக்கும் குருவினைக் கொள்ளார்
குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வார்
குருடுங் குருடும் குருட்டாட்டம் ஆடிக்
குருடுங் குருடும் குழிவிழு மாறே"

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்
உதவி ஆசிரியர்கள்:
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408

முன்பக்கத் தொடர்ச்சி...

நோக்கியே அ.தி.மு.கவின் புள்ளிகள் நகர்வதைப் பார்க்க முடிகிறது.

இந்தியா முழுக்க கள்ள, மோசடி ஆட்டத்தில் சிறப்பான பயிற்சியும், மெச்சத்தகு தேர்ச்சியும் பெற்றிருந்தாலும் கூட, தமிழ்நாட்டில் அவ்வளவு இலகுவாக இவர்களின் கள்ள ஆட்டத்தை முடிக்க முடியாமல் உள்ளபடியே 7 ஆண்டுகளாகத் திணறுகிறது பா.ஜ.க. தொடர்ச்சியாக எத்தனை தலைவர்களை மாற்றினாலும் தமிழ் நாட்டில் பெரிய பாதிப்பையோ அல்லது வெற்றியையோ அடைய முடியாது என்று உணர்ந்தவர்கள் பா.ஜ.கவினர். தலைவர்கள் அவர்களுடைய தனிப்பட்ட வளர்ச்சியில் கவனம் செலுத்திக்கொள்கிறார்கள். நிர்மலா சீத்தாராமன் கட்சியைக் கெடுத்துவிட்டதாகக் குற்றப்பத்திரிகை வாசித்ததற்கு கொஞ்சமும் நேர்மை மாறாமல், அண்ணாமலை சிறப்பாக சர்ச்சைகள் கிளப்பிக்கொண்டு, சொத்துகள் சேர்த்துக்கொண்டு இருந்திருக்கிறார். அதனால் தான் அவர்மீது எந்த அச்சமுமின்றி சென்ற ஒன்றிய தேர்தலில் எடப்பாடியாரே கூட்டணியை முறித்துக்கொண்டார். என்ன இருந்தாலும் கல்வியால் கொஞ்சம் சுயமரியாதையும் முதுகெலும்பும் பெற்றவர்கள் தானே அ.தி.மு.க.வினரும்.

இந்த முறை எப்படியும் அ.தி.மு.க வை ஒடுக்கி, அமைச்சரவையில் இடம் பிடித்து விட வேண்டும் அல்லது தனித்து எதிர்க் கட்சியாகவாவது வந்து விட வேண்டும் எனத் திட்டமிடுகிறது பா.ஜ.க.

அதற்காக அமித்ஷாவின் அடுத்த பட்டியலில் செங்கோட்டையன், டி.டி.வி. இன்னும் அந்தப் பட்டியலில் யார்யாரோ?எவ்வளவுபேரமோ?அண்ணாவின்பெயரைத் தாங்கிய அ.தி.மு.க. எனும்கட்சி காப்பாற்றப் படவேண்டும். கட்சியில் சுயமரியாதையைத் தக்க வைத்துக்கொண்டு, அமைதியாகஇன்னும்கட்சிக்குஉயிர்க்காற்றுஅளித்துவரும் மூத்தவர்கள் அதைச் செய்ய வேண்டும். அடுத்தத் தேர்தலில் ஒருவலுவான எதிர்க்கட்சியாக,'பா.ஜ.க. முகமூடி' இல்லாத ஒரு திராவிடக் கட்சியாக வரவேண்டும் என்பதே தமிழ் நாட்டுத் திராவிட அரசியல் நோக்கர்களின் எண்ணம்! காத்திருப்போம்! ●


திராவிட இயக்கத் தமிழர் பேரவை
தென்காசி மாவட்டம்
நடத்தும்
அரசியல் பயிலரங்கம் மற்றும்
இரண்டாம் ஆண்டு தொடக்க விழா
நாள் : 06.09.2025 சனிக்கிழமை காலை 09.00 - மாலை 6.00 வரை
இடம் : ஸ்ட்ரீட் ஃபுட், மதுரை - தென்காசி ரோடு, ஸ்பெக்ட்ரம் ஸ்கூல் அருகில்,
கதிர்காந்தம், இலத்தூர்


திராவிட இயக்கத் தமிழர் பேரவை தென்காசி மாவட்டம்
அரசியல் பயிலரங்கம் மற்றும்
இரண்டாம் ஆண்டு தொடக்க விழா


நடத்தும்
அரசியல் பயிலரங்கம் மற்றும்
இரண்டாம் ஆண்டு தொடக்க விழா


திராவிட இயக்கத் தமிழர் பேரவை தென்காசி மாவட்டம்
நடத்தும்
அரசியல் பயிலரங்கம் மற்றும்
இரண்டாம் ஆண்டு தொடக்க விழா





